சரவணபவ

**பீலபெல்ட்**

# அருள்மிகு கல்யாணதிருமுருகன் கோவில்

  



**முருகா! வேலுண்டு வினையில்லை ! மயிலுண்டு பயமில்லை ! முருகா!**

## 14.04.2015 செவ்வாய்க்கிழமை

# சித்திரைப் புத்தாண்டு

முருகன் அடியார்களே !

ஜேர்மனி வடமேற்கின் அழகிய பீலபெல்ட் நகரில் பதிகொண்டு எழுந்தருளி பக்தர்களின் குறைபோக்கும் அழகிய வேலோன் அருள்மிகு கல்யாண திருமுருகன் கோவிலில் மலர இருக்கும் சித்திரைப் புதுவருட சிறப்பு விஷேட பூஜையாக **அஷ்டோத்திர சங்காபிஷேகம்** (108) **14.04.2015** செவ்வாய்க்கிழமை திருமுருகனருளால் நடைபெற இருப்பதனால் முருகனடியார்கள் அன்று நடைபெறும் தெய்வீகக் கிரியாகாலங்களில் கோவிலுக்கு குடும்பசமேதரராக பக்தி சிரத்தையுடன் வந்து, வணங்கி, விரும்பிய பேறுகளைப் பூரணமாகப் பெற்று, ஆனந்தப் பெருவாழ்வு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

09:00 **மணிக்கு விஷேட சங்காபிஷேக பூஜைகள்**
12:00 **மணிக்கு விஷேட பூஜை**
13:30 **மணிக்கு மகேஸ்வரபூஜை (அன்னதானம்)**
17:00 **மணிக்கு பூஜை**

- **சங்கு** உபயம் எடுக்க விரும்புபவர்கள் முன்கூட்டியே கோவில் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- 13.04.2015 **திங்கட்கிழமை** அன்று 12.00 மணியிலிருந்து 21:00 மணிவரை அடியார்கள் **மருத்து நீர்** பெற்றுக் கொள்ளலாம்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

நிர்வாகம், **05.04.2015, Tel: 0176 41 41 56 42, 0176 34 98 73 77**

**Begaweg 11, 33649 Bielefeld**

Bankverbindung: **TKBV e.V., Volksbank Bielefeld - Gütersloh e.G., IBAN: DE90 4786 0125 2304 3249 00, BIC:GENODEM1GTL**

# மன்மத வருடப் பிறப்பு

முருகன் அடியார்களே !

மலரவிருக்கும் மங்களகரமான மன்மத எனும் பெயர் கொண்ட புத்தாண்டு சித்திரை மாதம் 1ம் நாள் (14.04.2015) செவ்வாய்க்கிழமை காலை 8:54 மணிக்கு கிருஷ்ணபட்ஷ தசமி திதியில், அவிட்ட நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சுபம் நாமயோகத்தில் விட்டிக் கரணத்தில் கடகலக்கினத்தில் கடக நவாம்சத்தில் குரு காலவோரையில், சுக்கிரன் சூட்சுமவோரையில் ,தாமத குணவேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய மயில் நடைத் தொழிலும் சூக்கும பக்ஷி நடைத் தொழிலும் செய்யுங் காலத்தில் பிறக்கின்றது.

## விஷு புண்ணியா காலம்

14.04.15 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4:54 மணிமுதல் மதியம் 12:54 மணிவரை

விஷு புண்ணியாகாலத்தில் மருத்து நீர் தேய்த்து நீராடி சிவப்பு, வெள்ளை பட்டாடையாயினும், சிவப்புக்கரை வெள்ளைக்கரை அமைந்த பட்டாடையாயினும் உடுத்து பவளம், முத்து இழைத்த ஆபரணமணிந்து குலதெய்வ வழிபாடுகள் செய்து குரு, பெற்றோரை வணங்கி ஆசிபெற்று தான தருமங்கள் செய்து அறுசுவை உணவருந்தி, தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம் போன்ற மங்கலப் பொருட்களை தரிசித்துப் புத்தாண்டுப் பலனை வாசித்தும் கேட்டும் மங்களமாக வாழக்கடவீர்!

## சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் கால்கள், சித்திரை, உத்தராடம் 2,3,4ம் கால்கள் திருவோணம், அவிட்டம் என்பனவாகும். இந் நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து நீராடி, ஆலய வழிபாடு செய்து, தான தருமங்கள் புரிந்து, சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

## கை விஷேட சிறப்பு நேரம்

15.04.2015 புதன்கிழமை காலை 07:00 மணி முதல் 08:50 மணி ,பகல் 10:00 மணிமுதல் 11:12 வரை மாலை 18:00 மணிமுதல் 19:30 வரையும்

## 01.05.2015 வெள்ளிக்கிழமை: சித்திரைமாதப் பிரதோஷயாகம், விஷேடபூஜை

## 03.05.2015 ஞாயிற்றுக்கிழமை: சித்திராப் பௌர்ணமி, சித்திரகுப்த விரதம்